பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 07 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு குறித்த ஆக்கபூர்வமான கருத்துகளை வரவேற்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

**2.** அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் மக்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

**3.** மேகதாது அணை விவகாரம் தொடர்பாக விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மாநில அரசு உடனடியாக கூட்ட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

**4.** தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**5.** உலக பாரா வில்வித்தைப் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு குறித்த ஆக்கபூர்வமான கருத்துகளை வரவேற்பதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் முறை 100 ஆண்டுகளாக இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசின் செயல்பாடுகள் குறித்த கருத்துகளை பரிசீலனை செய்து அவற்றை உரிய முறையில் செயல்படுத்துவதற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசு தயாராக உள்ளது என்று அவர் கூறினார்.

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் யோசனை முதலில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தப்பட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2006 மற்றும் 2008-ம் ஆண்டுகளில் 10 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் 5 சதவீதம் அளவிற்கு எத்தனால் கலப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததாக திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<>>>>

போதைப்பொருள் பழக்கம் காரணமாக நாடு முழுவதும் 7 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போதைப்பொருள் பழக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

விழிப்புணர்வு, சிகிச்சை, மறுவாழ்வு, மறுஒருங்கிணைப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம், போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுக்காக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

சமூகத்தில் இருந்து போதைப்பொருள் புழக்கத்தை அகற்றுவதற்கு மத்திய-மாநில அரசுகள், அமைச்சகங்கள், சமூக அமைப்புகள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு. வீரேந்திர குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வெங்காயத்தின் கொள்முதல் விலை 13 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெங்காயத்தின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 875 ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 125ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இத்தகைய கொள்முதல் நடவடிக்கைகள் காரணமாக வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு வருவாய் அதிகரிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் வெங்காயம் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் மக்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

மாநிலத்தில் பிஜேபி கட்சியின் அமைப்பை வலுப்படுத்துவதுடன், அரசியல் பணிகளை தொண்டர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு கட்சி நிர்வாகிகளுடன் கலந்துரையாடிதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள், போதைப்பொருள் புழக்கம் போன்றவை அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பாக மாநில அரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தால் ஆளுநரிடம் மனு அளிக்கப்பட்டதாக அவர் தெளிவுபடுத்தினார்.

ஆட்சியில் நடைபெறும் தவறுகளை சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியின் ஜனநாயக கடமை என்று திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணையின் கட்டுமானம் தமிழகத்தின் நீர் உரிமையும், காவிரி டெல்டா பகுதியின் விவசாயமும் கடுமையாக பாதிக்கப்படும் என்று கூறினார்.

இது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் மாநில அரசு தீவிரப்படுத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள், விவசாயிகள், இளைஞர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்த விவகாரத்தில் மாநில அரசு சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர் மற்றும் நீர்வளத்துறை அமைச்சரை சந்தித்து தமிழகத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என்று திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தென்காசி மாவட்ட மலைப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி குளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - செந்தில் - 41 செகண்ட்ஸ்)

<<<<>>>>

வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த மூன்று நாட்களில் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து,

ஒடிசா மற்றும் சத்தீஸ்கட் மாநிலங்களின் வடபகுதியை அடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில், ஒருசில இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

<u>இருவரிச் செய்திகள்</u>

அமெரிக்காவில் நிலவும் கடும் வெப்பத்தில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

-------------

ஸ்பெயின் மற்றும் ஃபிரான்ஸ் நாடுகளில் நிலவி வரும் கடும் வெப்பத்தால் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

-------------

மாலி நாட்டின் வட பகுதியில் உள்ள நகரங்களைக் குறி வைத்து கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டு ராணுவம் கூறியுள்ளது.

-------------

மஹாராஷ்டிராவில் ஆசிரியர் தகுதித் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கில், மேலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

------------

வங்கி மோசடி தொடர்பான வழக்கில், சிபிஐ நடத்திய சோதனையின்போது சட்டவிரோதப் பணப் பரிமாற்றம் செய்தது உட்பட பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

-------------

மேற்குவங்க மாநில சட்டப்பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் பயிலரங்கு நேற்று நிறைவடைந்தது.

-------------

நாமக்கல் மாவட்டம் இறையமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடம் மற்றும் வகுப்பறைகளை மாநில அமைச்சர் திரு. அருண் ராஜ் திறந்து வைத்தார்.

-------------

டெல்டா மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளாக அறிவித்து, மாநில அரசு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என்று மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

-------------

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே தேத்தாகுடிப் பகுதியில், காவல் துறையினர் மேற்கொண்ட வாகன சோதனையின்போது போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

-------------

தருமபுரி மாவட்டம் புலிக்கரையில் நபார்டு திட்டத்தின்கீழ் **42** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் புதிய கால்வாய் பணிகளை ஆட்சியர் திரு. சரவணன் ஆய்வு செய்தார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா வில்வித்தைப் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **Bhawna** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஹர்வீந்தர் சிங் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் காம்பவுண்ட் பிரிவில், **Sheethal Devi**-யும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Pooja Jatyan**-னும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **5** தங்கம், **3** வெள்ளி, **2** வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

------------

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Swastika - Taneesha Kotecha** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Ankur Bhattacharjee - Swastika Ghosh** இணையும் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **Sayali Wani** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**